# பத்தேகம பிரதேச சபை
# காலி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 10 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 10 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்தோபர் 17 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பத்தேகம பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 5,577,900 தொகையான தொங்கல் கணக்கு வரவு மீதி இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது வருமானக் கடன்பட்டோராகக் காண்பிக்கப்பட்டிருந்துது.

(ஆ) போக்குவரத்து தொடர்புபடுத்துதல் தேவை மற்றும் ஏனைய சேவைச் செலவினம் ரூபா 71,087 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 7,108,717 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினம் ரூபா 7,037,630 தொகையினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சபையின் முன் அங்கீகாரமின்றி கடை இலக்கம் 09 மற்றும் 12 என்பவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தது.

(உ) 20 கடைகளின் முன்னால் நீடிக்கப்பட்டு பொருட்கள் காட்சிக்காக குவிக்கப்பட்டிருந்தது.

(ஊ) ஞாயிறு சந்தைக்கு முன்னாலுள்ள புதிய கடை இலக்கங்கள் 12, 13, 14, 16, 17, 18, 19 மற்றும் 20 என்பன மூடப்பட்டிருந்தன.

### 2.2.5 மின் சமிக்ஞை கோபுரக் கட்டணம்

கந்தெவத்த தலாவ கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட இலங்கை டெலிக்கொம் மொபிடெல் கோபுரத்திற்காக ரூபா 25,000 செயன்முறைக் கட்டணமாகவும் ரூபா 3,000 இணக்கக் கட்டணமாகவும் அறவிடப்பட வேண்டிய போதிலும் செயன்முறைக்கட்டணமாக ரூபா 13,800 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

### 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிரந்தர/ தற்காலிக/ அமைய/ நாட்கூலி/ ஒப்பந்த அல்லது ஏனைய எந்த அடிப்படையிலாவது ஆட்சேர்ப்புக்களைச் செய்ய வேண்டுமாயின் அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெறவேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாது சபையினால் 33 அமைய மற்றும் நாட்கூலி ஊழியர்கள் சேர்க்கப்பட்டு 2012 ஆம் ஆண்டின் போது சபை நிதியத்திலிருந்து ரூபா 6,242,907 தொகை சம்பளம் மற்றும் படியாக செலுத்தப்பட்டிருந்தது.

### 2.4 காணி ஏலவிற்பனை

(அ) பரசேதெனியதுவ காணி

இந்தக் காணியின் ஏல விற்பனை தொடர்பாக 2013 ஆகஸ்ட் 13 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்தக் காணி ஏல விற்பனையிலிருந்து சபைக்கு ஒதுக்கப்பட்ட பரப்பளவான 39.75 பேர்சஸ் காணிக்கூறு இலக்கம் 56, 57 மற்றும் 58

(இ) கந்தெவத்த காணி

முலட்டியன்கொட வத்த காணி மற்றும் கம்பியன்கொட வத்த காணிக் கூறின் வரைபடத்திட்டம் குழுவினால் அங்கீகரிக்கப்படும் போது மின்சாரம் மற்றும் நீர் வசதி சகல கூறுகளுக்கும் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தமையின் கீழ் (திகதி தவிர்த்து) அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

கூறுகளை விற்பனை செய்வதற்கு முன்னர் நீர், மின்சாரம் மற்றும் வீதி போன்ற சகல உட்கட்டமைப்பு வசதிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டு இணக்கச் சான்றிதழ் பெறவேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மின்சாரம் மற்றும் நீர் வசதிகள் பெறப்பட்டிராததுடன் துண்டுக் குப்பைகளை அகற்றுவதற்கான முறைமையும் தயாரிக்கப்படாதிருந்தமை 2013 யூலை 10 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 04 வருடங்களுக்கு முன்பிலிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 27,256 பெறுமதியான 07 காசோலைகளுக்காக உரிய தரப்பினரிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 516,947 தொகையான 06 கணக்கு மீதிகளை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 03 ஊழியர்களிடமிருந்து 03 வருட காலமாக அறவீடுகள் நிலுவையாக இருந்த கடன் மீதிகள் ரூபா 29,865 ஆகும். இந்த நிலுவையாக இருந்த கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு சபையினால் போதியளவான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர் /2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன்